**S.T.C.No.53/2024**

**Dated: 31.12.2024**

**PW: 1** ராஜ்குமார்

**(Witness has been administered Oath U/s 3 of the Oaths Act 1969)**

**குறுக்கு விசாரணை :**

1) உங்களது புகார் மனுவிலும் வழக்கறிஞர் அறிவிப்பிலும் நீங்கள் என்ன தொழில் செய்து வருகிறீர்கள் என்பதை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அதைப்போல் எதிரி சலூன் கடை நடத்தி வருகிறார் என்பதை வழக்கறிஞர் அறிவிப்பில் சொல்லவில்லை என்றால் சரிதான். ஆனால் புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. உங்களது தகப்பனார்பெயர் என்ன என்பது வழக்கறிஞர் அறிவிப்பி அனுப்புவதற்கு முன்பு எதிரிக்கு தெரியாது என்றால்சரியல்ல,. எதிரிக்கு தெரியும்.

2) தாவாகடன் தொகைக்கு எவ்வளவு வட்டி என்றால் 1 சதவீதம் வட்டி. ஒரு வட்டிக்கு எந்ததேதியில் தாவாகடனை எதிரி உங்களிடம் வாங்கினார் என்றால் 08.03.2023. இந்த தேதியில் உங்களிடம் ரூ12,50,000/-இருந்தது என்பதை காண்பிக்க எந்த ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். ரூ12,50,000/- என்பது ஒரு அதிகதொகை என்றால் சரிதான். இந்த தொகை உங்களிடம் இருக்கும் பட்சத்தில் அதற்கு வருமானவரி செலுத்தியிருப்பீர்கள் என்றால் நான் ஒரு NRI. இந்த விபரத்தை உங்களது வழக்கு ஆவணங்களில் சொ்லலவில்லை என்றால் தாவாகடனை கொடுக்கும் நான் ஒரு NRI அல்ல.

3) 2021 ஆண்டிலேயே உங்களது NRI Status முடித்துவிட்டது என்றால் சரிதான். அதன்பிறகு நீங்கள் சம்பாதித்த பணத்திற்கு வருமானவரி செலுத்தியிருப்பீர்கள் என்றால் நான் தொழில் எதுவும் செய்யவில்லை. தொழில் எதுவும் இல்லாதபோது தாவா கடன் தொகையானது 2023 ல் உங்களிடம் இருந்திருப்பதற்கான வாய்ப்பு இருந்திருக்காது என்றால் நான் தொழில் எதுவும்

செய்யவில்லை NRI amount ஆக கையில் வைத்திருந்தேன்.இதனை நீரூபிக்க ஆவணங்கள் தாக்கல் செய்யமுடியும் என்றால் சரிதான்.

4) எதிரி தாவா காசோலையில் உங்கள் முன்னிலையில் கையொப்பம் செய்தார் என வழக்கு ஆவணங்களில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். ஆனால் என் முன்னிலையில் என் நண்பர் இருக்கும் போது கையொப்பம் செய்தார். புகார்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள ராஜசேகர் ஊர் திருமங்கலம் என்றால் சரிதான். இந்த ராஜசேகர்தான் எதிரியை உங்களுக்கு அறிமுகம் செய்து வைத்தாரா என்றால் இல்லை. எதிரி எனக்கு நன்கு பழக்கம் உடையவர்.,

5) எதிரிக்கு மொத்தம் எத்தனை குழந்தைகள் என்ற விபரம் உங்களுக்கு தெரியாது என்றால் சரியல்ல. தெரியும் . எதிரிக்கு இரண்டு பிள்ளைகள் ,. மூத்த மகள் கல்லூரியிலும் 2 வது மகள் பள்ளியிலும் படிக்கிறார்கள். எதிரியின் மனைவி ஜான்போஸ்கோ பள்ளியில் ஆசிரியராக பணியாற்றி வருவதாக எதிரியின் மனைவி என்னிடம் சொன்னார். எதிரியின் என்ன பெயரில் சலூன் கடை நடத்தி வருகிறார் என்ற விபரம் உங்களுக்கு தெரியாது என்றால் சரியல்ல. ஜெய் சலூன். எதிரி நீங்கள் சொல்வது போல் சலூன்கடை நடத்தவில்லை. என்றால் சரியல்ல.

6) எதிரி 08.03.2023 ல் மேற்படி ராஜசேகர் என்பவரிடமிருந்து ரூ1,75,000/- கடனாக வாங்கிக்கொண்டு அதற்கு ஆதரவாக ஒரு கையொப்பம் மட்டும் செய்யப்பட்ட புரோநோட் மற்றும் கையொப்பம் உள்பட எதுவும் நிரப்பப்படாத தாவாகாசோலையும் கொடுத்திருந்தார் என்றாலும் , 09.05.2023 ல் மேற்படி கடன் தொகையை திருப்பி செலுத்திவிட்டு மேற்படி ஆவணங்களை கேட்டபோது புரோநோட்டு மட்டும் திருப்பி கொடுத்துவிட்டு தாவாகாசோலையினை திருப்பி தராமல் தேடிதருவதாக சொல்லிவிட்டு மேற்படி புரோநோட்டிலுள்ள எதிரியின் கையொப்பத்தினை பார்த்து தாவா காசோலையில் போட்டு உங்களிடம் கொடுத்து

பொய்யான சங்கதிகளை குறிடப்பிட்டு இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.

6) புகாரில் சொன்ன தேதியில் தாவாகடன் தொகையை எதிரி உங்களிடம் பெறவில்லை என்றாலும் தாவா காசோலையை உங்களிடம் கொடுக்கவில்லை என்றாலும் தாவா கடன்தொகையை கொடுக்கும் அளவிற்கு உங்களுக்கு எந்தவிதமான வருமானம் கிடையாது என்றாலும் எதிரியின் குடும்ப விபரங்கள் அனைத்தும் மேற்படி ராஜசேகர் சொன்னதின் அடிப்படையில் உங்களுக்கு தெரியும் என்றாலும் சரியல்ல.

7) நீங்கள் விருதுநகரில் வசித்து வரும்போது கோவில்பட்டிலுள்ள எதிரியைஎந்த வகையிலும் தெரிந்திருக்க வாய்ப்பே இல்லை என்றால் 2022 ஆண்டு வரை நான் கோவில்பட்டியில் தான் இருந்தேன். நீங்கள் சொல்வது போல் கோவில்பட்டியில் எந்தகாலத்திலும் குடியிருந்தது கிடையாது என்றால் சரியல்ல. எதிரிக்கும் உங்களுக்கும் எந்த காலத்திலும் கொடுக்கல் வாங்கல் கிடையாது என்றாலும் இந்த வழக்கானது தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றாலும் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Taken before me in open court, read over to the
witness and admitted by the deponent to be Correct.

Sd/-Thiru.K.Baskar
Judicial Magistrate,
Fast Track Court(Magisterial Level),
**Kovilpatti.**